# பத்திரிக்கை செய்தி

## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த சேவை மையம் செயல்பட்டு வருகிறது. சமூக நல இயக்குநர் அவர்களின் அறிவிப்பின் படி இத்திட்டத்தில் மாவட்ட அளவில் 3 வழக்கு ஆலோசகர் பணிகளை நியமனம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சேவை மைய வழக்கு ஆலோசகர் (மகளிர் மட்டும்) காலிப் பணியிடங்கள் 3 உள்ளது. இதற்கு கல்வித் தகுதி இளங்கலை சட்டப்படிப்பு / சமூகப்பணி / சமூகவியல் / சமூக அறிவியல் / உளவியல் ஆகிய பிரிவுகளில் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும். மேலும் அரசு அல்லது அரசு சாரா திட்டத்தில் பெண்கள் தொடர்புடைய பணியில் குறைந்த பட்சம் 3 வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும் உள்ளூரில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆலோசனை மற்றும் மறு வாழ்வு அளித்தல் சம்மந்தமான ஒப்பந்தப் பணி, இதற்கான மாத ஒப்பந்த ஊதியம் ரூ.15,000/ வழங்கப்படும். மேற்கண்ட பணி முற்றிலும் தற்காலிகமானது மேலும் பணியாளர்கள் சுழற்சி முறையில் (பகல், இரவு) பணியமர்த்தப்படுவார்கள்.

இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்க உரிய விண்ணப்பபடிவம் கள்ளக்குறிச்சி மாவட்ட இணையதளத்தில் https://kallakurichi.nic.in இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தகுந்த சான்றிதழ்களுடன் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் வளாகத்தினுள் செயல்பட்டு வரும் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 25.11.2022 அன்று மாலை 5.45 மணிக்குள் சமர்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10/11/22

மாவட்ட ஆட்சியர்
கள்ளக்குறிச்சி.

(2/2)